Dhinathdhalam@gmail.com

www.dhinathdhalam.com

விளம்பரதாரர்கள் தேவை
தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர – பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.
☎ 9 111 222 654

தினத்தளம்
நடுநிலை நாளிதழ்
PRGI NO: TNBIL/25/A3556

செய்தியாளர்கள் தேவை

தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை
☎ 94440 82959

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., DHINATH DHALAM Tamil & English daily Paper ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 24 | திங்கள் Monday | 24.11.2025 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode

# ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் சீர்திருத்தங்கள் என்பது இனி கட்டாயம்

## பிரதமர் மோடி வலியுறுத்தல்



ஜோகன்னஸ்பர்க்: ஐ.நா.,வில் சீர்திரு த்தங்கள் என்பது இனி கட்டாயம்என்றுபிரதமர்மோடி வலியுறுத்தி உள்ளார்.

ஜோகன்னஸ்பர்க்: தென்னாப்பிரிக்காவின் ஜோகன்னஸ்பர்க்நகரில் ஜி20அமைப்பின் உச்சி மாநாடு நேற்று தொடங்கியது. இந்த மாநாட்டில் ஜி20 உறுப்பு நாடுகள் மற்றும் நட்பு நாடுகள் என 42 நாடுகளைச் சேர்ந்த தலைவர்கள் பங்கேற்றனர். அவர்களில் பலருடன் பிரதமர் நரேந்திர மோடி கலந்துரையாடினார்.

குறிப்பாக இத்தாலி அதிபர் ஜார்ஜியா மெலோனியுடன்பிரதமர் நரேந்திர மோடி கலந்துரையாடினார். உக்ரைன் போர் உள்ளிட்ட சர்வதேச விவகாரங்கள் குறித்து இரு தலைவர்களும் விவாதித்ததாக தகவல்கள் வெளியாகி உள்ளன. பிரேசில் அதிபர் லூயிஸ் இனாசியோ லூலா டா சில்வா, மாநாட்டின் போதுபிரதமர்மோடியை அவர்ஆரத்தழுவி வாழ்த்து தெரிவித்தார். இருவரும் சிறிது நேரம் நட்புடன்கலந்துரையாடினர். இரு நாடுகள் இடையிலானபொருளாதார உறவை வலுப்படுத்த இருதலைவர்களும் உறுதியேற்றனர். ஐ.நா. சபையின் பொதுச்செயலாளர் அந்தோணி யா குத்தேரஸ் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் முக்கிய நிர்வாகிகளுடனும் பிரதமர் மோடி தனித்தனியாக பேசினார்.

பிரிட்டிஷ் பிரதமர் கெய்ர்ஸ்டார்மர்,பிரதமர் மோடியை சந்தித்துப் பேசினார். இருவரும் சிறிது நேரம் உரையாடினர். ஆஸ்திரேலிய பிரதமர் அந்தோணி அல்போன்ஸ், கனடா பிரதமர் மார்ச் கார்னி, பிரதமர் மோடி ஆகிய 3 தலைவர்களும் தனியாக பேச்சுவார்த்தை நடத்தினர். தென் கொரிய அதிபர் லீ ஜே மியூங் கை பிரதமர் மோடி சந்தித்துப் பேசினார். தென் ஆப்பிரிக்காவின் ஜோகன்னஸ்பர்க்கில் இந்தியா, பிரேசில், தென் ஆப்ரிக்கா தலைவர்கள் கூட்டம் நடைபெற்றது. இதில் பிரதமர் மோடி கலந்து கொண்டார். கூட்டத்தில் அவர் பேசியதாவது;

உலக நாடுகள் மத்தியில் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஒருங்கிணைப்பு என்பது தேவை. இங்கு பயங்கரவாதத்தை எதிர்த்து செயல்படுவதில் இரட்டை நிலைப்பாடு என்பதற்கு இடமே இல்லை.

இந்த கூட்டம் 3 நாடுகளின் குழுக்கள் கூட்டம் அல்ல. மாறாக, 3 பெரிய ஜனநாயக நாடுகள் மற்றும் 3 பெரிய பொருளாதாரங்களை இணைக்கும் ஒரு முக்கிய தளம். நம் ஒவ்வொருவரின் முன்னேற்றத்தை நாம் பாராட்டிக் கொள்ளலாம். இது வளர்ச்சிக்கு ஒரு எடுத்துக்காட்டாக மாறும்.

ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு கவுன்சிலில் சீர்திருத்தங்கள் என்பது இனிமேல் ஒரு விருப்பம் அல்ல, மாறாக அது கட்டாயம்.கல்வி, சுகாதாரம், பெண்களுக்கு அதிகாரம் அளித்தல், சூரிய ஒளிசக்திபோன்றதுறைகளில் 40 நாடுகளின் திட்டங்களில் இந்தியா, பிரேசில்,தென் ஆப்பிரிக்கா நாடுகளின் பணி பாராட்டத்தக்கது.இவ்வாறு பிரதமர் மோடி கூறினார்.

# டிச. 10ல் அ.தி.மு.க. செயற்குழு, பொதுக்குழு கூட்டம்

## அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி அறிவிப்பு



சென்னை:

அதிமுகவின்செயற்குழு மற்றும் பொதுக்குழு கூட்டம் வரும் டிச. 10ம் தேதி சென்னை வானகரத்தில் நடைபெறும் என்று அக்கட்சி அறிவித்துள்ளது.

இது தொடர்பாக அதிமுகபொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில், "அதிமுக செயற்குழு மற்றும் பொதுக்குழுக் கூட்டம், கட்சியின் சட்ட விதிகளின்படி வரும் டிச. 10ம் தேதி காலை 10 மணிக்கு சென்னை வானகரத்தில் உள்ள ஸ்ரீவாரு வெங்கடாசலபதி பேலஸ் மண்டபத்தில் நடைபெற உள்ளது.

கட்சியின் அவைத் தலைவர் தமிழ்மகன் உசேன் தலைமையில் இக்கூட்டம் நடைபெறும். கட்சியின் செயற்குழு மற்றும் பொதுக்கழு உறுப்பினர்கள் மற்றும்சிறப்புஅழைப்பாளர்கள் அனைவருக்கும் தனித் தனியே அழைப்பிதழ் அனுப்பிவைக்கப்படும்.

உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் தங்களுக்கு அனுப்பப்படும் அழைப்பிதழுடன் தவறாமல் வருகை தந்து கழக செயற்குழு மற்றும் பொதுக்குழு கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார். கட்சியின் முன்னணி தலைவர்களில் ஒருவரான செங்கோட்டையன், சமீபத்தில் தலைமைக்கு எதிராக போர்க்கொடி உயர்த்தினார். ஓபிஎஸ், தினகரன், சசிகலா உள்ளிட்டோரை சேர்க்க வேண்டும் என்று வலியுறுத்தி தலைமைக்கு காலக்கெடு விதித்தார். இதற்காக அவரது கட்சி பதவிகள் பறிக்கப்பட்டன.இந்நிலையில்ஓபிஎஸ்,தினகரன், சசிகலா உடன் இணைந்து பேட்டி அளித்து, நிகழ்ச்சிகளிலும் செங்கோட்டையன் கலந்து கொண்டார். இதையடுத்து அவரை கட்சியில் இருந்து இபிஎஸ் நீக்கினார்.இத்தகைய சூழ்நிலையில் தான், அதிமுக பொதுக்குழு, செயற்குழு கூட்டத்தை கூட்டியுள்ளார் இபிஎஸ்., வரவிருக்கும் சட்டசபை தேர்தல், கூட்டணி தொடர்பாக கூட்டத்தில்விவாதிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# 2026ல் தவெக ஆட்சி உறுதி; தேர்தல் வாக்குறுதிகள் என்ன?

## தலைவர் விஜய் பரபரப்பு பேச்சு



2026ல் தமிழ்நாட்டில் தவெக ஆட்சி அமைவது உறுதி என காஞ்சிபுரத்தில் மக்கள் சந்திப்பில் தவெக தலைவர் விஜய் பேசியுள்ளார்.

கூட்டத்தில் பேசிய விஜய், "மக்களின் பிரச்னைகளைப் பேசும்போது தற்போது ஆட்சியில் இருப்பவர்களுக்கு தவெக மீது ஒரு ஆத்திரம் வரத்தானே செய்யும். அனைத்து மேடைகளிலும் தவெக பற்றி அவதூறு பேசுகிறார்கள். இதற்கெல்லாம் நாங்கள் பதில் சொல்வோம்.

கரூர் பற்றி நான் பேசுவேன் என்று எதிர்பார்க்கிறார்கள். நான் கண்டிப்பாக பேசுவேன். தமிழ்நாட்டில் மக்களுக்கான ஆட்சியை மக்கள் வரவைப்பார்கள். 2026ல் தவெக ஆட்சி அமையும். தேர்தல் அறிக்கையில் வாக்குறுதிகள் விரிவாக இடம்பெறும். அதில் சிலவற்றை இங்கு சொல்ல விரும்புகிறேன்.

எல்லாருக்கும் நிரந்தரமான வீடு இருக்க வேண்டும்.வீட்டிற்கு ஒரு இருசக்கர வாகனம் கண்டிப்பாக இருக்க வேண்டும். பொருளாதார வளர்ச்சிக்கு வழியை ஏற்படுத்த வேண்டும்.

வீட்டில் உள்ள ஒவ்வொருவரும் ஒரு டிகிரியாவது படித்திருக்க வேண்டும். வீட்டில் குறைந்தபட்சம் ஒருவருக்கு வருமானம் இருக்க வேண்டும். அதற்கான வேலைவாய்ப்பு ஏற்படுத்தித் தர வேண்டும்.

கல்வியில் பாடத்திட்ட சீர்திருத்தம் செய்ய வேண்டும்.

அரசு மருத்துவமனைகளுக்கு மக்கள் பயமின்றிச் செல்ல வேண்டும்.

பருவ மழைக் காலங்களில் மக்கள், விவசாயிகள் பாதிக்கப்படாமல் இருக்க வேண்டும்.

மீனவர்கள், நெசவாளர்கள்,அரசு ஊழியர்களின் ஆலோசனையுடன் ஒரு வளர்ச்சி திட்டம்.

தொழிற்சாலைகளை மேம்படுத்த வேண்டும். சட்டம் - ஒழுங்கு கடுமையான விதிகளுடன் சரியாக இருக்க வேண்டும்.


இவற்றை எல்லாம் எப்படி செயல்படுத்துவோம் என்றும் தேர்தல் அறிக்கையில் கூறுவோம்.

நான் அரசியலுக்கு வந்தது மக்களுக்கு நல்லது செய்ய மட்டுமே.

சொன்னால் அதைச் செய்யாமல் விடமாட்டேன். குறிவைத்தால் தவற விடமாட்டேன்.

மீண்டும் சொல்கிறேன் வரும் தேர்தலில் திமுகவுக்கும் தவெகவுக்கும் தான் போட்டி. வெற்றி நிச்சயம்" என்று பேசினார்.

# தெற்கு அந்தமான் கடல் பகுதிகளில், புதிய காற்றழுத்த தாழ்வு பகுதி 16 மாவட்டங்களுக்கு கனமழை; வானிலை மையம் தகவல்



சென்னை:

'தெற்கு அந்தமான் கடல் பகுதிகளில், புதிய காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகி உள்ளதால், தமிழகத்தில், 16 மாவட்டங்களில், இன்று மழை பெய்யும்' என, வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

அதன் அறிக்கை:

தமிழகத்தில், வடகிழக்கு பருவமழை காரணமாக, பல்வேறு மாவட்டங்களில் மழை பெய்து வருகிறது. நேற்று மதியம் நிலவரப்படி, அதிகபட்சமாக திருநெல்வேலி மாவட்டம், ஊத்து பகுதியில் 12செ.மீ., மழை பெய்தது.

தெற்குஅந்தமான் கடல் மற்றும் அதனை ஒட்டியுள்ள பகுதிகளின் மேல் நிலவிய, வளிமண்டல மேலடுக்கு சுழற்சி காரணமாக, நேற்று காற்றழுத்த தாழ்வு பகுதி உருவானது.

இது நாளை, தென்கிழக்கு வங்கக்கடல் பகுதிகளில்,காற்றழுத்ததாழ்வு மண்டலமாக வலுப்பெறக்கூடும். அதற்கடுத்த 48 மணி நேரத்தில், மேற்கு, வட மேற்கு திசையில் தொடர்ந்து நகர்ந்து, தென்மேற்கு வங்கக் கடல் பகுதிகளில், மேலும் வலுப்பெறக்கூடும்.

இதனால், தமிழகம் மற்றும் புதுச்சேரியில் சில இடங்களில், இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யும்.

குறிப்பாக, கன்னியாகுமரி, திருநெல்வேலி, தென்காசி, துாத்துக்குடி, ராமநாதபுரம், சிவகங்கை, விருதுநகர், மதுரை,அரியலுார்,கள்ளக்குறிச்சி, புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, கடலுார் மாவட்டங்களில், சில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இன்று கனமழை பெய்யும்.

இதேபோல், நாளை முதல் 28ம் தேதி வரை, தமிழகத்தில் சில இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில், லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில், இன்று வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் சில பகுதிகளில், இடி, மின்னலுடன் கூடிய, மழை பெய்ய வாய்ப்புள்ளது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

செய்திகள்
உடனுக்குடன் படிக்க
தினத்தளம்
DHINATH DHALAM
வாட்ஸ் அப் குரூப்பில்
இணையுங்கள்
Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

## நாமக்கல் மாவட்டம் குமாரபாளையத்தில் தளிர்விடும் பாரதம் அறக்கட்டளையின் சார்பில் இல்லம் தேடி மரக்கன்று வழங்கினர்

நாமக்கல் மாவட்டம் குமாரபாளையம் தளிர்விடும் பாரதம் அறக்கட்டளையின் சார்பில் அமைப்பின் தலைவர் சீனிவாசன் அவர்களின் தலைமையில் இல்லம் தேடி மரக்கன்று இல்லம் தோறும் மரக்கன்று என்ற திட்டத்தின் மூலம் பொதுமக்களின் இல்லம் தேடிச் சென்று செடி மற்றும் மரக்கன்றுகளை தளிர்விடும் பாரதம் அமைப்பினர் வழங்கினர்.

பூ வகை , மருத்துவ வகை செடிகளும் மற்றும் நிழல் தரும் மரக்கன்றுகளையும் பொதுமக்கள் ஆர்வத்துடன் வாங்கி அவர்கள் இல்லத்தின் முன்பாக நட்டு வைத்தனர்.






பொதுமக்களிடம் மரக்கன்றுகள் வழங்கி தளிர்விடும் பாரதம் செயலாளர் பிரபு அவர்கள் பேசும்பொழுது,

இன்றைய சூழலில் மரக்கன்றுகள் நடுவது மிகவும் இன்றிமையாதது. சுற்றுச்சூழலை பாதுகாக்கவும், இயற்கையை பேணி காக்கவும் மரக்கன்றுகள் நடுவது அவசியம் என கூறினார். மேலும் பொது மக்களுக்கு மரக்கன்றுகள் தேவைப்பட்டால் தளிர்விடும் பாரதம் அமைப்பினரை (86678 74420, 99522 57652) தொடர்பு கொள்ளலாம் எனவும் தெரிவித்தார்.

குமாரபாளையம் பள்ளிபாளையம் ரோடு அப்பன் பங்களா தெரு, சின்னப்பநாயக்கன்பாளையம் மற்றும் காவேரி நகர் போன்ற பகுதிகளில் இல்லம் தேடி சென்று மரக்கன்று வழங்கப்பட்டது.

நிகழ்வில் தளிர்விடும் பாரதத்தின் சார்பில் சம்ரிதி,பழனிவேல், சமூக சேவகர் சித்ராபாபு ஆகியோர் கலந்து கொண்டனர்.





நல்லூர் மேற்கு திருநெல்வேலி மேல்நிலைப் பள்ளியில் மாணவ மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகளை வழங்கப்பட்டது.

## வேப்பூரில் பாமக நல்லூர் ஒன்றிய செயற்குழு கூட்டம்!

### மாநில அமைப்பு தலைவர் திருமாவளவன் பங்கேற்று சிறப்புரையாற்றினார்

கடலூர் மாவட்டம் வேப்பூர்லெமன்ஹோட்டலில் பாட்டாளி மக்கள் கட்சி கடலூர் மேற்கு



மாவட்டம் விருத்தா ச்சலம் சட்டமன்றத்தொகுதி நல்லூர் கிழக்கு ஒன்றியம் சார்பில் ஒருங்கிணைந்த பொதுக்குழு கூட்டம் நல்லூர் ஒன்றிய செயலாளர்கள் கமலி வேல்முருகன், இளையராஜா ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. மாநில செயற்குழு உறுப்பினர் பழனிச்சாமி வரவேற்பு உரையாற்றினார்.

கட்சியின் மாநில அமைப்பு தலைவர் திருமாவளவன், மாவட்டச் செயலாளர் ஜெ. கார்த்திகேயன் ஆகியோர் சிறப்பு அழைப்பாளராக பங்கேற்று கட்சியின் வளர்ச்சி, எதிர்கால செயல்திட்டங்கள் மற்றும் பூத் கமிட்டி நிர்வாகிகள் அமைப்பது தொடர்பாக நிர்வாகிகளுக்கு ஆலோசனை வழங்கினர். இக்கூட்டத்தில் மாவட்டத் துணைச் செயலாளர் செந்தில், மாவட்டத் துணைத் தலைவர் மஞ்சமுத்து உடையார், மாநில இளைஞர் சங்க துணை செயலாளர் செந்தில் ராஜா,மாவட்டத்துணைச் செயலாளர் தங்கதுரை, மங்களூர் ஒன்றிய செயலாளர் கோபி மற்றும் கட்சியின் ஒன்றிய,கிளை அளவிலானநிர்வாகிகள் பலர் பங்கேற்று சிறப்பித்தனர்.

முன்னதாக, நல்லூர் ஒன்றிய பகுதிகளில் தேர்தல் களப்பணிகள் மேற்கொள்ள கோபி, தங்கதுரை,ரமேஷ்,சரவணன், செந்தில், பழனிச்சாமி மற்றும் மஞ்சமுத்து ஆகியோர்புதியபொறுப்பாளர்களாக நியமிக்கப்பட்டனர்.



குமாரபாளையம் நகராட்சி ஜே கே கே ரங்கம்மாள் துவக்கப்பள்ளி விட்டலபுரி வாக்குச்சாவடியில் இன்று 23.11.2025 சிறப்பு SIR முகாம் நடைபெற்றது. குமாரபாளையம் நகராட்சி 17வது வார்டு பாகம் எண் 17,18,19,20,21,22 ஆகிய பாகம் எண்கள் விண்ணப்பம் படிவம் பூர்த்தி செய்து வழங்கப்பட்டது. மக்கள் நீதி மய்யம் மகளிரணி மாவட்ட அமைப்பாளர் திருமதி. சித்ராபாபு, மற்றும் எஸ் ஐ ஆர் பூத் முகவர்கள்,ஆசிரியர், அனைத்து கட்சியினர் கலந்து கொண்டனர்.

## செங்கோட்டையில் அறிவியலும் சமுதாயமும் என்ற தலைப்பில் கருத்தரங்கம்

தென்காசி மாவட்டம் செங்கோட்டைமூன்று வாய்க்கால் பகுதியில் உள்ள தமிழ்க்குமரன் தோட்டத்தில் வைத்து



எதிர்கால சமூகம் ஓர் அறிவார்ந்த சமூகமாக பரிணமிக்க மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் கல்வியாளர்களிடையே பரந்துபட்ட அறிவியல் பார்வை சிந்தனைகளை விதைக்கும் முயற்சியாக "அறிவியலும் - சமூகமும் " என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடைபெற்றது. தமிழ்நாடு முதுகலை பட்டதாரி ஆசிரியர் சங்க மாவட்ட செயலர் முத்துக்குமார் தலைமை தாங்கினார். ஆசிரியர்கள் கலைச்செல்வி, ஸ்ரீதர் , முப்புடாதி ஆகியோர் முன்னிலைவகித்தனர்.

ஆசிரியர் ஐயப்பன் வரவேற்றார்.

கடல்சார் ஆராய்ச்சியாளர் , பெண்ணியலாளர், குழந்தைகளுக்கான எழுத்தாளர் , சூழலியல் ஆர்வலர் முனைவர். நாராயணி சுப்ரமணியன் கருத்தாளராக பங்கேற்று

எது அறிவியல்? பரிணாம வளர்ச்சி, பாலின சமத்துவம் , பல்லுயிர் பெருக்கம், அன்றாட வாழ்வில் உள்ள அறிவியலை புரிந்து கொள்ள கருத்துரை வழங்கி உரையாடினார்

கருத்தரங்கு இயற்கை சூழலில் நடைபெற்றது.

ஆசிரியர்கள், மாணவர்கள், சமூக ஆர்வலர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்

பயிற்சிக்கான ஏற்பாடுகளை தமிழ்நாடு உயர்நிலை மேல்நிலைப் பள்ளி பட்டதாரி ஆசிரியர் கழக மாநில சட்ட செயலாளர் ஆசிரியர் பிச்சைக்கனி , தலைமை ஆசிரியர் மணிமாறன் ஆகியோர் செய்திருந்தனர். தமிழ்நாடு அறிவியல் இயக்க மாவட்ட செயலாளர் சுரேஷ்குமார் ஒருங்கிணைத்தார். தமிழாசிரியர்

காளிராஜ் மதிப்பீடு செய்தார். ஆடிட்டர் மாரியப்பன், ஆசிரியர்கள் ராஜ் சுதாஸ்,மாடக்கண்ணு , சிவா, முனைவர் நடராஜன் , பிரபு உட்பட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். பதவி உயர்வு பெற்ற முதுகலை பட்டதாரி ஆசிரியர் சங்க மாநில பொறுப்பாளர் சண்முக சுந்தரம் நன்றி கூறினார்.

## தமிழ்நாடு கலைத்தாய் நாட்டுப்புற கலைஞர்கள் நலச் சங்க கடலூர் மேற்கு மாவட்ட செயற்குழு கூட்டம்

தமிழ்நாடு கலைத்தாய் அனைத்து நாட்டுப்புற கலைஞர்கள் நலச் சங்கத்தின் கடலூர் மேற்கு மாவட்ட செயற்குழு கூட்டம் வேப்பூரில் உள்ள சிவன் மடத்தில் மாவட்ட தலைவர் மாய முனுசாமி தலைமையில் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் சின்னத்துரை அனைவரையும் வரவேற்றார். இக்கூட்டத்திற்கு மாவட்டத் துணைத் தலைவர் கோவிந்தசாமி,மாவட்ட பொருளாளர் சிவக்குமார், வட்டத் துணைத் தலைவர் ஆறுமுகம், வட்ட பொருளாளர் கணேசன், வேப்பூர் வட்டத்தலைவர்மணி, திருமுட்டம் வட்டச் செயலாளர் வீரமணி, திட்டக்குடி வட்ட செயலாளர் சஞ்சய் ஆகியோர்முன்னிலை வகித்தனர்.



சிறப்பு விருந்தினர்களாக மாநிலதுணைச்செயலாளர் முருகவேல் மற்றும் கிழக்கு மாவட்ட தலைவர் நாகலிங்கம் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினர். கூட்டத்தில் எடுக்கப்பட்ட முக்கியத் தீர்மானமாக, சங்கத்தின் கடலூர் மாவட்டத்தின் சார்பில் வருகிற டிசம்பர் 28ஆம் தேதி நடைபெற உள்ள மாநில மாநாட்டிற்கு அனைத்துப் பொறுப்பாளர்களும் ஒன்றுகூடி சிறப்பாக நடத்துவது என முடிவு செய்யப்பட்டது. மேலும், தமிழக அரசால் இசைக்கலைஞர்களுக்கு 50% பஸ் பாஸ் வழங்கப்பட்டுள்ள நிலையில், தமிழக அரசு இசைக் கலைஞர்களுக்கும் இலவசமாகபஸ்பாஸ் வழங்க வேண்டும் என்று வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அத்துடன், கடலூர் மாவட்டம் முழுவதும் உள்ள நலிந்த இசைக் கலைஞர்களுக்கு இலவச மனைப்பட்டா மற்றும் வீடு கட்ட ஆணை வழங்கக் கோரிகடலூர்மாவட்ட ஆட்சியருக்கு இக்கூட்டம் கேட்டுக் கொள்வது உள்ளிட்ட தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன. இக்கூட்டத்திற்குதிட்டக்குடி, வேப்பூர், ஸ்ரீமுஷ்ணம், விருத்தாசலம் வட்டத்தில் உள்ள நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்துகொண்டனர். இறுதியில், மாவட்டச் செய்தி தொடர்பாளர் ஆரோன் ராஜ்குமார் நன்றி கூறினார்.

## வரி விளம்பரங்கள்



தினத்தளம்

DHINATH DHALAM

| | | |
|---|---|---|
| மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள் |
| கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் |
| ஆண்டு விழா | | |
| திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் | நினைவு நாள் |
| ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் | நகைக்கடன் |
| வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல் | |

தொடர்புக்கு : ☎ +919444082959

## அச்சிறுப்பாக்கம் அருகே திமுக. மத்திய ஒன்றிய செயலாளர் எஸ்.ஐ .ஆர். வாக்காளர் சேர்க்கை பணியை நேரில் ஆய்வு

செங்கல்பட்டுமாவட்டம் மதுராந்தகம்சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட அச்சிறுப்பாக்கம் ஒன்றியத்தில்



காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் க.சுந்தர் எம். எல்.ஏ அவர்களின் அறிவுறுத்தலின் பேரில் எஸ் ஐ ஆர் வாக்காளர் சேர்க்கை பணியை அச்சிறுப்பாக்கம் மத்திய ஒன்றிய செயலாளர் டி.வி. கோகுலகண்ணன் அவர்கள் பாகம் எண் 155.ல் அடங்கிய பாபுராயன் பேட்டை பொற்பணங்கரனை

ஊராட்சியில் நேரில் சென்று ஆய்வு செய்து பார்வையிட்டு விரைந்து எஸ் ஐ ஆர் வாக்காளர் பட்டியல் பணியை துரிதப்படுத்திட கட்சியின் நிர்வாகிகளை கேட்டுக்கொண்டு ஊர்ஜிதப்படுத்தினார் உடன் கட்சிநிர்வாகிகள் ஒன்றியகுழுஉறுப்பினர் பெரும்பேர்கண்டிகைபார்த்தசாரதி மாவட்டபிரதிநிதி பாபுராயன் பேட்டை து.கருணாகரன் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்



ஈரோடு மாவட்டம் ஆணைக்கல்பாளையம் ஆயுதப்படை வளாகத்தில் மேற்கு மண்டல ஐ.ஜி. செந்தில்குமார் திடீர் ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின் போது போலீசாரின் ரோந்து வாகனங்களை பார்வையிட்டார். மேலும் காவலர்களிடம் குறைகள் பற்றி கேட்டறிந்தார்.மேலும் அறிவுரைகளை வழங்கினார். இந்த ஆய்வின்போது ஈரோடு மாவட்ட காவல்கண்காணிப்பாளர் சுஜாதா உடன் இருந்தார்.




ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் நகராட்சி கால்நடை மருத்துவமனை இணைந்து தெரு நாய்களுக்கான வெறி நோய் தடுப்பூசி முகாம் நடைபெற்றது. சத்தியமங்கலம் நகராட்சி பகுதியில் சுற்றித் திரியும் தெருநாய்களை நகராட்சி பணியாளர்களை கொண்டு பிடித்து அதனை கால்நடை மருத்துவமனைக்கு கொண்டு சென்று வெறிநாய் கடி தடுப்பூசி செலுத்தப்பட்டது. நகராட்சி ஆணையாளர் வெங்கடேஸ்வரன் முன்னிலையில் கால்நடை மருத்துவர் பிரவீன் வெறிநோய் தடுப்பூசி செலுத்தினார்.

## கோவையில் இந்திய வரி செலுத்துவோர் அமைப்பு மற்றும் ஃபிக்கி அமைப்புகள் சார்பில்

# 'ஜி.எஸ்.டி.யின் பயணம் மற்றும் அடுத்த கட்டம்' எனும் சிறப்பு கருத்தரங்க நிகழ்ச்சி கோவை நீலாம்பூர் பகுதியில் நடைபெற்றது

இந்தியாவில் உள்ள வரி செலுத்துவோர் சங்கமான இந்திய வரி செலுத்துவோர்அமைப்பு மற்றும் பிக்கி ஆகியவை, இணைந்து கோவை நீலாம்பூர் பகுதியில் உள்ள தனியார் உணவக அரங்கில், ஜிஎஸ்டியின் பயணம், 2017 முதல் 2025 வரை மற்றும் அதன் அடுத்த கட்டம்' என்ற தலைப்பில் ஒரு சிறப்பு கருத்தரங்கை நடத்தியது.




2017ம் ஆண்டு ஜூலை 1ம் தேதி அன்று ஜிஎஸ்டி என்றழைக்கப்படும் சரக்கு மற்றும் சேவை வரி அறிமுகப்படுத்தப்பட்டதைக் குறிக்கும் வகையிலும்,கடந்த எட்டு ஆண்டுகளில் ஜிஎஸ்டி அமலாக்கம் எவ்வாறு இருந்தது என்பதை விரைவாக ஆய்வு செய்யவும்,அத்துடன்தொழில் துறைகளுக்கு ஒரு சிறந்த ஜிஎஸ்டி வரிச் சூழலை உருவாக்குவது எப்படி என்று எதிர்காலத்தை நோக்கிய திட்டங்களைப் பற்றி அறியவும் இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டது.

ஜிஎஸ்டி அறிமுகப்படுத்தப்பட்டதில் இருந்து இன்றுவரை, கடந்த 8 ஆண்டுகளில் பல மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.அரசாங்கம் மக்களின் கருத்துக்களைக் கேட்டறிந்து, அதற்கேற்ப மாற்றங்களைச் செயல்படுத்தியதாலேயே இந்த மாற்றங்கள் சாத்தியமாயின.

இந்த மாற்றங்கள் மக்கள் மற்றும் அரசாங்கத்தின் இலக்குகளுக்கு ஆதரவளிக்கும் வகையில் அமைந்ததாகவிழாவின் வாயிலாக தெரிவிக்கப்பட்டது. இதில் இந்திய வரி செலுத்துவோர் அமைப்பின் தலைவர் ஆர். சாந்தகுமார் வரவேற்புரை வழங்கினார். மேலும் பல்வேறு துறைகளைச் சேர்ந்த ஒன்பது புகழ்பெற்ற வல்லுநர்கள் இந்த நிகழ்வின் மையக்கருத்து குறித்துப் பேசினர். இதில்,

வங்கிகள் சார்பாக சிட்டி யூனியன் வங்கியின் பொது மேலாளர் சுப்பிரமணியன், பொறியியல் துறையில் கிராஃப்ட்ஸ்மேன் ஆட்டோமேஷன் லிமிடெட் நிறுவனத்தின் இணை நிர்வாக இயக்குநர் கௌதம் ராம், அரசாங்கத்தின் சார்பாக மத்திய ஜிஎஸ்டி மற்றும் மத்திய கலால் உதவி ஆணையர் ஆர்.மணிமோகன்; சுகாதாரத் துறையில் ஷீலா மற்றும் பெத்தேல் மருத்துவமனையின்தலைமை நிர்வாகஅதிகாரி டாக்டர் ராஜபாண்டியன், விருந்தோம்பல் துறையில் லீ மெரிடியன் ஹோட்டலின் நிர்வாக இயக்குநர் சென்னிமலை,நகைத்துறையில் எமரால்டு ஜூவல் இண்டஸ்ட்ரி இந்தியா லிமிடெட் நிறுவனத்தின்தலைமைநிர்வாக அதிகாரி சீனிவாசன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் இருதியாக இந்திய வரி செலுத்துவோர் அமைப்பின் செயற்குழு உறுப்பினர் மிதுன் ராம்தாஸ்நன்றி உரைவழங்கி விழாவினை நிறைவு செய்தார்.

# கோவையில், சுமார் 50 ஏக்கர் நிலத்தில் ஒரு பசுமை மண்டலத்தை உருவாக்கிய கோவை தொழிலதிபர்

## இயற்கை சார்ந்த மருத்துவ சேவைகளுக்கு சிறப்பு திட்டம் உள்ளதாக பேட்டி

கோவையில், மக்களுடன் 50 ஆண்டுகளுக்கும் மேலாக ஒரு சுவையான உறவை கொண்டுள்ள கே.ஆர் பேக்ஸ் நிறுவனம்,இன்று தென்னிந்தியாவில் 23 முக்கிய நகரங்களில் 70 விற்பனை நிலையங்களைக் கொண்டு பேக்கரி துறையில் தனக்கென ஒரு தனி இடத்தை பெற்றுள்ளது.



கோவையை தனது அடித்தளமாகக் கொண்டுள்ள இந்த நிறுவனம் தன்னுடைய வளர்ச்சிக்கு பக்கபலமாக இருந்த இந்த மாவட்டத்திற்கும் அதன் சுற்றுசூழலுக்கும் கைமாறு செய்யும்வகையில், சுமார் 50 ஏக்கரில் ஒரு பசுமை மண்டலத்தை உருவாக்கி உள்ளது.

என்றும் பரபரப்பாக உள்ள கோவை மாவட்டத்தின் நவக்கரை பகுதியில் ஆயிரக்கணக்கான மரங்கள், பறவைகள் செழிக்கவும், மாசடைந்த காற்றை தன்னுள் கொண்டு சுத்திகரித்து சுத்தமான காற்றை வழங்கும் ஒரு பெரும் மண்டலமாகவும் உள்ளது கே.ஆர். தோட்டம்

"பறவைகள் மற்றும் பல்வேறு உயிரினங்களுக்கான ஒரு பெரிய பசுமையான சரணாலயத்தை உருவாக்கும் ஒரே நோக்கத்துடன் 2012 ஆம் ஆண்டில் கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள நவகாரை கிராமத்தில்50ஏக்கர்நிலத்தை நாங்கள் வாங்கினோம். இன்று, இப்படிப்பட்ட இயற்கைக்கான அரும்பணிகளால் எதை சாதிக்க முடியும்? என யாரவதுகேட்டால்இதோ இப்படி ஒன்றைசாத்தியமாக்க முடியும் என கூறும் அளவுக்கு ஒரு வாழும் எடுத்துக்காட்டாகஇந்தநிலம்உள்ளது என்பதை கோவை,மக்களுடன் பகிர்ந்து கொள்வதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்," என்று கே.ஆர் பேக்ஸின் நிறுவனர் கே.ஆர். பாலன் மற்றும் இயக்குநர் பி. சுஜித் ஆகியோர் தெரிவித்தனர்.

ஒரு காலத்தில் தரிசு நிலமாக இருந்த இந்த பகுதி, கே.ஆர் பேக்ஸ் குடும்பத்தின் 14ஆண்டுகால தொடர்ச்சியான முயற்சியால் செழிப்பான பச்சை வனமாக மாறியுள்ளது. இந்த இடம், பல்லாயிரக்கணக்கான நாட்டு மரங்கள் மற்றும் மருத்துவ குணங்கள் கொண்ட மரங்கள், எண்ணற்ற பறவைகள், பூச்சிகள் மற்றும் உயிரினங்களுக்கு இளைப்பாறும் இடமாக உள்ளது.

கே.ஆர் பேக்ஸின் இயக்குநர்பி.சுஜித்பேசுகையில், "நாங்கள் இந்த நிலத்தை வாங்கியபோது, இந்த வளாகத்தில் ஏற்கனவே ஒரு பெரிய ஆலமரமும் சுமார் 10 தென்னை மரங்களும் இருந்தது எங்களுக்குக் கிடைத்த பாக்கியம். இன்று, நாங்கள் இங்கே 50,000 மரங்களை நட்டுள்ளோம்," என கூறினார்.இது நிலத்துடன் இவர்களுக்கு உள்ள ஆன்மீக தொடர்பை அடையாளப்படுத்தும் விதமாக இந்த பசுமையான சோலைக்கு மத்தியில், ஒரு சிறிய கோவிலும் உள்ளது.

கே.ஆர். பேக்ஸ் நிர்வாகம் இந்தப் பண்ணையை பொதுமக்களும் வந்து ரசித்து, பயன் பெற பொது வருகைக்கு இதை திறக்கத் திட்டமிட்டுள்ளது. அதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. விரைவில், இது அனைவரும் அனுபவிக்கக்கூடிய ஒரு பசுமைப் புகலிடமாக மாறும் என தெரிவித்தார்.

# தேஜஸ் விமானம் விழுந்து விமானி உயிரிழப்பு : விமானப்படை வீரருக்கு கலெக்டர் பவன்குமார் அஞ்சலி

கோவை சூலூரில் இருந்து சென்ற சாகசம் செய்த தேஜாஸ் விமானம் தீப்பிடித்து விமானி உயிரிழந்தார். சூலூர் விமானப்படை தளத்தில் அவரது உடலுக்கு கோவை மாவட்ட ஆட்சியர், மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் அஞ்சலி செலுத்தினார்.

துபாய் விமான கண்காட்சியில் நடைபெற்று வருகிறது. இந்தியா உட்பட 115 நாடுகளைச் சேர்ந்த நிறுவனங்கள் கண்காட்சியில் பங்கேற்று உள்ளன. நேற்று முன்தினம் பிற்பகல் 2.10 மணி அளவில் விமான சாகச கண்காட்சி நடைபெற்றது இதில் சூலூர் விமானப்படை தளத்தில் இருந்து சென்ற தேஜஸ் எம்.கே 1 இலகு ரக போர் விமானத்தின் விமானி 37 வயது நமன்சியால் பறந்து சென்று சாகசம் செய்த விமானம் திடீரென வானில் இருந்து தரையை நோக்கி பறந்து வந்துவிழுந்துதீப்பிடித்து எறிந்தது. இதில் விமானி நமன் சியால் பரிதாபமாக இறந்தார்.

இந்த சம்பவம் நாடு முழுவதும் பெரும் சோகத்தையும், அதிர்ச்சியையும் ஏற்படுத்தி உள்ளது.

சூலூர் விமானப்படை தளத்தில் நமது சியான் குட் மார்னிங் கமாண்டராக பணியாற்றி வந்தார். விபத்து நடந்த விமானத்தை கண்காட்சியில் இடம்பெறுவதற்காக கோவையில் இருந்து துபாய்வரைஅவர்இயக்கியதாகதெரிகிறது.அவரது உயிரிழப்பால் சூலூர் விமானப்படை தளம் சோகமயமாக காட்சி அளிக்கிறது.



சூலூர் விமானப்படை குடியிருப்பில் நமன்சியால்தனது மனைவி மற்றும் ஏழு வயது குழந்தையுடன் வசித்து வந்தார். அவருடைய மனைவியும் விமானப்படை அதிகாரி தான்.தற்பொழுது விமானப்படை தொடர்பாக மேற்படிப்பு படித்து வருகிறார். 7 வயது பெண் குழந்தை இரண்டாம் வகுப்பு படித்து வருகிறாள். நமன்சியால் விமான விபத்தில் உயிரிழந்ததை அறிந்ததும் அவரது மனைவி மற்றும் ஏழு வயது குழந்தை கண்ணீர் விட்டு கதறி அழுதபடி இருந்தனர்.

நேற்று பிற்பகல் அவர்கள் நமன்சியால் உடல் கொண்டு செல்லப்பட்ட இமாச்சலப் பிரதேச மாநிலத்தில் உள்ள சொந்த ஊருக்கு விமான மூலம் சூலூரில் இருந்து புறப்பட்டுச் சென்றனர்.

இந்த நிலையில் இன்று தற்பொழுது சூலூர் விமானப்படைத்தளத்தில் அவரது உடல் கொண்டு வரப்பட்டது. அவரது உடலுக்கு கோவை மாவட்ட ஆட்சியர் பவன்குமார் மற்றும் காவல் கண்காணிப்பாளர் கார்த்திகேயன் ஆகியோர் அஞ்சலி செலுத்தினர்.

## இந்திய ஜவுளி சங்கம், தென்னிந்திய பிரிவு சார்பில்

# கோவையில் 78வது அகில இந்திய ஜவுளி மாநாட்டின் துவக்கவிழா

### கோவை நீலாம்பூர் பகுதியில் உள்ள தனியார் உணவக அரங்கில் நடைபெற்றது

இந்திய ஜவுளி சங்கம் தென்னிந்திய பிரிவு, சார்பில் 78வது அகில இந்திய ஜவுளி மாநாடு கோவை நீலாம்பூர் பகுதியில் உள்ள தனியார் உணவகஅரங்கில்நடைபெற்றது.

உலகளாவிய ஜவுளிகள், வாய்ப்புகளை வெளிப்படுத்துதல்" என்ற கருப்பொருளில் இரண்டு நாட்கள் நடைபெற்ற இந்த மாநாட்டில், அமெரிக்கன் அசோசியேஷன் ஆஃப் டெக்ஸ்டைல் கெமிஸ்ட்ஸ் அண்ட் கலரிஸ்ட்ஸ் உடன் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த கருத்தரங்கில் தொழில்துறையினர் எதிர்கொள்ளும்சவால்கள் குறித்து பல முக்கிய அறிவுப் கருத்தரங்குகள் மற்றும் விவாதங்கள் இடம்பெற்றது.

எல்.எம்.டபிள்யூ நிறுவனத்தின் தலைவரும், நிர்வாக இயக்குநரான சஞ்சய் ஜெயவர்த்தனவேலு மாநாட்டின் தொடக்க விழாவில் தலைமை விருந்தினராகப் பங்கேற்றார். நாடு முழுவதிலும் இருந்து 600க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் இந்த முக்கியமான ஜவுளித் தொழில் மாநாட்டில் கலந்துகொண்டனர் இந்திய ஜவுளி சங்கம் தென்னிந்திய பிரிவு தலைவர் இ.சத்யநாராயணாவரவேற்புரைவழங்கினார். இந்திய ஜவுளி சங்கத்தின் தேசியத் தலைவர் டி.எல். படேல், ஜவுளி துறைக்கு இந்த சங்கத்தின் பங்களிப்பு குறித்துப் பேசினார். மாநாட்டின் ஒருங்கிணைப்பாளர் கே.ராமலிங்கம், இதன் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார். இந்த நிகழ்வில் இந்திய ஜவுளி சங்கத்தின் அடுத்த தலைவர் விஜ், மற்றும் பிரீமியர் மில்ஸ் நிர்வாக இயக்குநர்டாக்டர்.கே.வி. சீனிவாசன், சிறப்புஉரை வழங்கினார் . ஜவுளி துறையில் மூலப்பொருளான பருத்தி தன்னிறைவு பெற்ற நாடுகளில் இந்தியாவும் ஒன்றாக உள்ளது,இருப்பினும்,பருத்தி உற்பத்தியில் மகசூல் குறைந்ததால், இந்த சாதக நிலையை இந்தியா மெதுவாக இழந்து வருகிறது என கூறினார். எனவே,விதைகள் மேம்பாடு, உற்பத்தித்திறன் அதிகரிப்பு மற்றும்விவசாயிகளுக்கு ஊக்கத்தொகை வழங்குதல் ஆகியவற்றில் அரசாங்கம் ஆதரவளிக்க வேண்டும் இதுவே இப்போதைய அத்தியாவசியத் தேவையாகும் என்றும், ஜவுளித் தொழில் உற்பத்தித் துறைக்கு அரசாங்கம் இந்த வகையில் உதவ முடியும் என்றும் அவர் கருத்து தெரிவித்தார்.







தொடர்ந்து எல்.எம். டபிள்யூ தலைவர் சஞ்சய் ஜெயவர்த்தனவேலு அவர்களின் கரங்களால் பள்ளிப்பாளையம் பல்லவா குழுமத்தின் நிர்வாக இயக்குநர் துரை பழனிசாமி மற்றும்தேனி எல்.எஸ். மில்ஸ் லிமிடெட் தலைவர் எஸ். மணிவண்ணன் ஆகியோருக்கு 'தொழில்சார் சிறப்புவிருதுகள்'வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன், கே.எம். நிட்வேர் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் கே.எம். சுப்பிரமணியம் மாநாட்டின் மலரை வெளியிட்டார், அதன் முதல் பிரதியை சுலோச்சனா காட்டன் ஸ்பின்னிங் மில்ஸ் நிர்வாக இயக்குநர்கிருஷ்ணகுமார்பெற்றுக்கொண்டார்

# கோவை, ஜெம் மருத்துவமனை சார்ப்பாக, கோவை நீலாம்பூர் பகுதியில் சர்வதேச அளவிலான லேப்ராஸ்கோபி அறுவை சிகிச்சை கருத்தரங்கம் நடைபெற்றது

### ஜெம் புற்றுநோய் மையத்தில் பிரத்தியேக தொராசிக் அறுவை சிகிச்சைத் துறை துவங்கப்பட்டுள்ளது

லேப்ராஸ்கோபி அறுவை சிகிச்சை முறையில் முன்னோடியாக திகழும் கோவை ஜெம் மருத்துவமனை சார்பாக, கோவை நீலாம்பூர் பகுதியில் உள்ள தனியார் அரங்கில், நவம்பர் 19ம் தேதி முதல் 22ம் தேதி வரை, 4 நாள் சர்வதேச அளவிலான 'லேப்ரோசர்ஜ்' எனும் லேப்ராஸ்கோபி அறுவை சிகிச்சை கருத்தரங்கம் நடைபெற்றது. இந்த ஆண்டு நடைபெறும் மிக முக்கியமான அறுவை சிகிச்சை கருத்தரங்கு நிகழ்வுகளில் இது ஒன்றாக கருதப்படுகிற நிலையில், ஜெம் மருத்துவமனை சார்பாக நடத்த படும் இக்கருத்தரங்கின் 10ம் பதிப்பாக அமைந்தது. இந்த நிகழ்விற்கு இந்தியா மற்றும் அண்டை நாடுகளில் இருந்து 1,500க்கும் மேற்பட்ட அறுவை சிகிச்சை நிபுணர்கள் வருகை புரிந்துள்ளனர். இதில் நேரடி அறுவை சிகிச்சைகள், முக்கிய உரைகள், நேரடிப் பயிற்சி அமர்வுகள் மற்றும் தேசிய,சர்வதேச வல்லுநர்கள் தலைமையிலான குழு-விவாதங்கள் ஆகியவை இடம்பெறுகின்றன.

மேலும் இந்த கருத்தரங்கில்,தாய்வான்,மலேஷியா, சிங்கப்பூர், இலங்கை, தாய்லாந்து, பிலிப்பைன்ஸ் போன்ற 7 நாடுகளில் இருந்து 10 புகழ்பெற்ற சர்வதேச வல்லுநர்கள் பங்கேற்கின்றனர்.

ஜெம் புற்றுநோய் மையத்தில் தொராசிக் அறுவை சிகிச்சைத் துறை துவக்கம்

இந்த நிகழ்வின்போது, ஜெம்புற்றுநோய்மையம் தனது புதிய தொராசிக் அறுவை சிகிச்சை துறையை துவக்கியது. இந்த புது துறையை தேசிய மருத்துவ ஆணையத்தின் தலைவர் டாக்டர். அபிஜாத் ஷேத், ஜெம் மருத்துவமனையின் தலைவர் டாக்டர்.சி. பழனிவேலு மற்றும் இணைநிர்வாகஇயக்குநர் டாக்டர்.பிரவீண் ராஜ் ஆகியோர் முன்னிலையில் துவக்கிவைத்தார்.




இது நுரையீரல் புற்றுநோய் மற்றும் பல்வேறு தீங்கற்ற தொராசிக் பகுதி நோய்களுக்கான முழுமையான சிகிச்சைக்காக அர்ப்பணிக்கப்பட்ட, அதிநவீனப் பிரிவாகும். மார்பு மற்றும் நுரையீரல் கோளாறுகள் உள்ள நோயாளிகளுக்கு நவீன, பல்துறை சிகிச்சையை வழங்குவதற்கான சிறந்த மையமாக இது விளங்கும்.

இதன் பின்னர் செய்தியாளர்களிடம் ஜெம் மருத்துவமனையின் தலைவர் டாக்டர்.சி.பழனிவேலு மற்றும் இணை நிர்வாகஇயக்குநர் டாக்டர். பிரவீண் ராஜ் ஆகியோர் பேசுகையில், மார்பக பகுதிகளில் ஏற்படும் பாதிப்புகளுக்கு சிறந்ததீர்வுகளைவழங்க அதற்கான பிரத்தியேக சிகிச்சை முறைகளின் அவசியத்தை பற்றி பகிர்ந்துகொண்டனர். அவர்கள் தொடர்ந்து பேசுகையில்,எம்.ஐ.எஸ். என்று சொல்லப்படும் குறைந்தபட்ச ஊடுருவல் அறுவை சிகிச்சைத் துறையை மேம்படுத்துவதற்காகபுதுமை,பயிற்சி மற்றும் நெறிமுறை மருத்துவ நடைமுறையை இணைக்கும் ஜெம் மருத்துவமனையின் தொலைநோக்குப் பார்வையைபற்றிபகிர்ந்தனர்

## தூத்துக்குடியில் மாவட்ட நிர்வாகம் சார்பில் நடைபெற்ற

# தனியார் வேலைவாய்ப்பு முகாமில் தேர்வானவர்களுக்கு பணி நியமன ஆணைகளை கனிமொழி எம்.பி. வழங்கினார்

தூத்துக்குடி மில்லர்புரம் புனித மரியன்னை ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில், தூத்துக்குடிமாவட்டநிர்வாகம் சார்பில்தனியார்வேலைவாய்ப்பு முகாம் நடைபெற்றது. இதில் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் பங்கேற்றனர். குறிப்பாக தூத்துக்குடியில் சமீபத்தில் தொடங்கப்பட்ட வின்பாஸ்ட் கார் தொழிற்சாலைக்கு பணியாளர்கள் தேர்வு செய்யப்படுவதாக தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து இளைஞர்கள் குவிந்தனர்.



தி.மு.க.துணைப்பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவருமான கனிமொழி எம்.பி., பார்வையிட்டு, முகாமில் தேர்வானவர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். இந்த முகாமில் 121 நிறுவனங்கள் மற்றும் 6 திறன் பயிற்சி நிறுவனங்கள் மற்றும் 2161 ஆண்கள், 425 பெண்கள் உள்ளிட்ட 2586 வேலைநாடுனர்கள் கலந்துகொண்டனர்.

மொத்தம் 762 பேருக்கு பணிநியமன ஆணை வழங்கப்பட்டது. 369 வேலைநாடுனர்கள் 2-ம் கட்ட நேர்காணலுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். 8 மனுதாரர்கள் திறன் பயிற்சி தொடர்பான விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ளனர். சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறைஅமைச்சர் கீதாஜீவன், மாவட்ட ஆட்சியர் இளம்பகவத், மேயர் ஜெகன்பெரியசாமி, சண்முகையா எம்.எல்.ஏ., நெல்லைமண்டலவேலை வாய்ப்பு இணை இயக்குனர் சண்முகசுந்தர், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மைய உதவி இயக்குநர் பேச்சியம்மாள், தமிழ்நாடு மாநில ஊரக, திட்ட அலுவலர் நாகராஜன், தூத்து க்குடி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர்(தொ.வ)சையது முகம்மது உள்பட பலர் கலந்து கொண்டனர்.



## ஈரோடு மாநகர் மீனாட்சி சுந்தரம் வீதியில்

# அப்பல்லோ பல் மருத்துவமனை அமைச்சர் முத்துசாமி திறந்து வைத்தார்

ஈரோடு மாநகர் மீனாட்சி சுந்தரம் வீதியில் அப்பல்லோ பல் மருத்துவ மனை புதிதாக தொடங்கப்பட்டுள்ளது. இதன் திறப்புவிழாவுக்கு ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ. பிரகாஷ் தலைமை தாங்கினார். இதில் அமைச்சர் சு.முத்துசாமி கலந்து கொண்டு ரிப்பன் வெட்டி புதிய ஆஸ்பத்திரியை திறந்து வைத்தார். ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி. சந்திர குமார் , ஈரோடு மாநகராட்சி மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம் ஆகியோர் குத்து விளக்கு ஏற்றினர்.

முன்னதாக தமிழ் நாடு மற்றும் கேரள மாநில பொறுப்பாளர் கார்த்திகேயன் வரவேற்றார்.

இந்த பல் மருத்துவமனையில் குழந்தைகள் மற்றும் பெரியவர்களுக்கு அனைத்து வகையான சிகிச்சை மருத்துவர்களும் செய்யப்படும் என்றும் ,திறப்பு விழா சலுகையாக 20 சதவீதம் தள்ளுபடி வழங்கப்படும் என்றும் நிர்வாகிகள் தெரிவித்தனர்.



முன்னாள் மத்திய அமைச்சர் முரசொலி மாறன் 22 ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு ஈரோடு தெற்கு மாவட்ட திமுக சார்பாக பெரியார் நகர் அமைச்சர் முகாம் அலுவலகத்தில் தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை, மதுவிலக்கு ஆயத் தீர்வை துறை அமைச்சர் சு.முத்துசாமி முரசொலி மாறன் அவர்களின் திரு உருவ படத்திற்கு மலர் தூவி மரியாதை செய்தார்.இந்நிகழ்ச்சியில் திமுக கழகத் துணை பொதுச்செயலாளரும் மேல் சபை உறுப்பினருமான அந்தியூர் ப.செல்வராஜ் , ஈரோடு பாராளுமன்ற உறுப்பினர் கே.ஈ. பிரகாஷ் , ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி. சி. சந்திரகுமார், ஈரோடு மாநகராட்சி துணை மேயர் வே.செல்வராஜ் ,மாநில மாணவரணி துணை செயலாளர் வீரமணி ஜெயக்குமார் ,மாவட்டத் துணைச் செயலாளர் ஆ. செந்தில்குமார்,மண்டல குழு தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள் ,பகுதி கழகச் செயலாளர்கள், வட்டக் கழக செயலாளர்கள் கலந்து கொண்டனர்.



ஈரோடு மாநகர் மேட்டூர் சாலையில் (தனியார் ஜவுளி கடை அருகில்) நடந்த சாலை விபத்தில் காயமடைந்த ஒரு பெண்மணி மற்றும் சிறுவனை, அந்த வழியாக காரில் சென்ற தமிழ்நாடு வீட்டு வசதித் துறை மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் சு.முத்துசாமி உடனடியாக மீட்டார். காயமடைந்த இருவரையும் அவர் அரசு மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக அனுப்பி வைத்தார். அமைச்சரின் இந்த மனிதாபிமான நடவடிக்கை அப்பகுதியில் பொதுமக்களிடையே நெகிழ்ச்சியை ஏற்படுத்தியது.



தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் ரூபாய் 5.50 கோடி மதிப்பீட்டில் மதுரை மாவட்டம், கிழக்கு தாலுகா, இராஜாக்கூர் திட்டப்பகுதி அணுகுசாலை | பணியின் பூமி பூஜையில் அமைச்சர் மூர்த்தி கலந்து கொண்டு பணிகளை துவக்கி வைத்தார்

## சத்தியமங்கலம் ஞான ஒளி சமூக உதவி அறக்கட்டளை சார்பில்,

# 200 மாற்றுத் திறனாளிகளுக்கு மாதாந்திர நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது



விழுப்புரம் மாவட்டம் செஞ்சி அடுத்த சத்தியமங்கலம் ஞான ஒளி சமூக உதவி அறக்கட்டளை சார்பில், மாற்றுத்திறனாளிகளுக்கு மாதாந்திர நலத்திட்ட உதவிகள் மற்றும் அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி சத்தியமங்கலம் வள்ளலார் தர்மசாலையில் நடைபெற்றது.

இதில் ஞான ஒளி சமூக உதவி அறக்கட்டளை நிறுவனர் ஞானமாணிக்கம் தலைமை தாங்கினார் விழுப்புரம் வடக்கு மாவட்ட சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம் செயலாளர் முத்து கார்த்திகேயன் முன்னிலை வகித்தார் ஞான ஒளி சமூக உதவி அறக்கட்டளை பணியாளர் வெண்ணிலா அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக சத்தியமங்கலம் காவல் ஆய்வாளர் சுரேஷ்பாபு கலந்து கொண்டு மாற்றுத்திறனாளிகள் 200 நபர்களுக்கு உணவு அரிசி, காய்கறிகள் உள்ளிட்ட பொருட்கள் அடங்கிய நலத்திட்ட உதவிகளை வழங்கி பேசுகையில் ஞான ஒளி சமூக உதவி அறக்கட்டளை மூலம் மாதந்தோறும் ஏராளமான மாற்றுத்திறனாளிகள், முதியோர்கள் என நூற்றுக்கும் மேற்பட்டோர் பயனடைந்து வருவதாக ஆய்வாளர் சுரேஷ்பாபு கூறினார்.

மேலும் மாற்றுத்திறனாளி ஒருவர் பாடல் பாடி அனைவரையும் மகிழ்வித்தார் இதனைத் தொடர்ந்து அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் சத்தியமங்கலம் சிபிஐ மாவட்ட செயலாளர் ஆல்பர்ட் வேளாங்கண்ணி, நவீன் எல்பிஜி கேஸ்சர்வீஸ்பிரான்சிஸ், , ஜான்டி குரூஸ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்

ஞான ஒளி சமூக உதவி அறக்கட்டளை சட்ட ஆலோசகர் வழக்கறிஞர் A.C. ராஜா நன்றி உரை வழங்கினார்.

# மானாமதுரை பாபா மெட்ரிக் பள்ளியில் ஸ்ரீ சத்ய சாய் பாபாவின் 100வது பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது.

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை பாபா மெட்ரிகுலேஷன் பள்ளி மற்றும் பாபா கார்டனில் பகவான் ஸ்ரீ சத்ய சாய் பாபா அவர்களின் 100வது பிறந்தநாள் விழா பள்ளிவளாகத்தில் நிறுவனர் அம்மா பி. இராஜேஸ்வரி அவர்களின் முன்னிலையில் கோலாகலமாக கொண்டாடப்பட்டது. இதில் பள்ளியின்மாணவமாணவிகள் ஆனந்தவல்லி அம்மன் கோவிலை சுற்றி நகர சங்கீர்த்தனம் பஜனை பாடி வந்தனர். பள்ளியின் நிர்வாகி திருமதி மீனாட்சி குத்துவிளக்கு ஏற்றி நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார்.



நிகழ்ச்சியில் ஸ்வாமியின் வேடம் அணிந்து வந்த மாணவர்களுக்கு பள்ளியின் தாளாளர் கபிலன் பரிசுகள் வழங்கி பாராட்டுக்கள் தெரிவித்தார். பள்ளி மாணவர்களிடம் உதவும் மனப்பான்மையை வளர்க்க, சுந்தரநடப்பு அருகில் உள்ள கருணாலயா இல்லத்தில் உள்ள மனவளர்ச்சி குன்றியவர்களுக்கு பள்ளியின் சார்பாக மதிய உணவு, இனிப்புகள் மற்றும் ஆடைகள் மாணவர்கள் கைகளால் வழங்கப்பட்டது.

பாபாவின் 1008 ஸகஸ்ர நாமாவளியை மலர் தூவி மாணவர்கள் வழிபட்டனர். நிகழ்ச்சியின் இறுதியில் மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் அனைவருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டு,ஆரத்தியுடன் நிகழ்ச்சி இனிதே நிறைவடைந்தது. இந்நிகழ்ச்சிக்கான முன்னேற்பாடுகள் அனைத்தையும் பள்ளியின் முதல்வர் சாரதா மேற்கொண்டார்.



ஒட்டப்பிடாரம்சட்டமன்றதொகுதிதூத்துக்குடிமத்தியதி.மு.கஒன்றியம்கூட்டுடன்காடுதூயஜோசப்மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற முகாமில் பாகம் எண் 164, 165, 166, 167, வாக்காளர் சீர்திருத்த பணியில் மாவட்ட பிரதிநிதி வெயில்ராஜ் , செல்வம், சேரந்தையன், உதயசிவா, பி.டி.ஏ. வசந்தகுமார் ஆகியோர் ஈடுபட்டனர்

Printed by,Hiwins Printers,Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at ERODE, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.